பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 26 | வியாழக்கிழமை | 08.05.2025 | அதிர்வு 277

## தேசிய மக்கள் சக்தி தேர்தலில் சாதனை



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாடு முழுவதும் பெறப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் தேசிய 06



# நிரந்தர தீர்வு என்கின்ற எமது இலக்குக்கு வடக்கு, கிழக்கு தமிழர் மீண்டும் ஆணை!

## விரைவில் மாகாண சபைத் தேர்தலையும் அரசு நடத்த வேண்டும் என்று சாணக்கியன் வலியுறுத்து

(வாலகிருஸ்ணா)

“நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை அடைய வேண்டுமென்ற எங்களுடைய இலக்குக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணை தந்திருக்கின்றார்கள்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். 06

# எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தால் பெரும்பாலான சபைகளை வெற்றி பெற்றிருக்கலாம்

## தன் அறிவுரைகளை அந்தக் கட்சிகள் கேட்கவில்லை என்று ரணில் ஆதங்கம்



நான் சொன்ன ஆலோசனையின் பிரகாரம் செய்திருந்தால் எதிர்க்கட்சிகள் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நான் தெரிவித்த ஆலோசனையின் பிரகாரம் ஐம்பது முதல் நூறு உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தால் கணிசமான எண்ணிக்கையிலான சபைகளை வெற்றி பெறுவதற்கு இடம் இருந்தது. குறிப்பாக கொழும்பில் மாத்திரம் 06




உள்ளூராட்சித் தேர்தல் முடிந்துவிட்டது. தமிழ்த் தேசியம் இப்போதைக்குத் தப்பி பிழைத்துவிட்டது என்ற திருப்தி – ஆசுவாசம் – பலருக்கு. ஆயினும் சில விடயங்களை சொல்லிக் காட்டத்தான் வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளின் 25 வீத வாக்குகளை மட்டும் பெற்று, அதன் மூலம் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட ஆறு ஆசனங்களில் மூன்று ஆசனங்களை – அதாவது 50 வீத ஆசனங்களை – பெற்றுக் கொண்ட தேசிய மக்கள் கட்சி அதன் பின்னர் இங்கு துள்ளிக் குதித்த விதம் – பண்ணிய சண்டப் பிரசண்டம் – எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

ஏதோ தமிழர்களை முழுமையாக ஜனநாயக வெற்றி கொண்டு, தங்கள் கைக்குள் கொண்டு வந்து விட்டோம் என்ற இறுமாப்புப் பேச்சும் நடவடிக்கைகளும்தான் அவர்கள் தரப்பிலிருந்து வந்து கொண்டிருந்தன.

தேசியத் தலைவர் பிரபாகரனின் 06



# 3 தமிழ்த் தேசியக் கட்சிகளின் வாக்குகள் இரட்டிப்பாக உயர்வு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று பிரதான தமிழ்த் தேசியக் கட்சி களின் வாக்குகள் ஏறத்தாழ இரண்டு மடங்கினால் அதிகரிக்க, ஆளும் தேசிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகள் வீழ்ச்சி கண்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 17 சபைகளிலும் உள்ள 409 ஆசனங் களில் 135 ஆசனங்களைத் தமிழ் அரசுக் கட்சி வென்றுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மொத்த ஆசனங்களில் இது 33 வீத ஆசன மாகும்.

இதேநேரம் யாழ்ப்பாணம் மாவட் டத்தில் தேசிய மக்கள் சக்தி இரண் டாம் இடத்தில் 81 ஆசனங்களைப் பெற்றுள்ளதோடு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி 79 ஆசனங் களைப் பெற்று 3 வது இடத்தை எட்டி யுள்ளது.

இதேபோன்று வாக்கு எண்ணிக் கையில் 2024 ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ள டக்கி 27,986 வாக்குகளை எடுத்த தமிழ்க் காங்கிரஸ் 26,605 வாக்குகள் அதிகரித்து 54,591 வாக்குகளை இம்முறை பெற்றுள்ளது. நாடாளு மன்றத் தேர்தலில் 22,513 வாக்கு களை மட்டுமே பெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி 22,058 வாக்குகள் அதிகரித்து 44,571 வாக்குளை பெற்றுள்ளது.

இவ்வாறே 63,327 வாக்குகளை பெற்ற தமிழ் அரசுக் கட்சி 117,616 வாக்குகளைப் பெற்று சாதனை வெற்றியை நிலை நாட்டி அதிகப்படி யாக பெருவாரியான வாக்குகளைப் பெற்றுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் 80,830 வாக்குகளைப் பெற்ற அநுரா அரசின் தேசிய மக்கள் சக்தியானத. இம்முறை 13,663 வாக்குகள் பின்னடைவச் சந் தித்து 67,167 வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொண்டது.

# மட்டக்களப்பு நகரில் ஹோட்டல் உரிமையாளரிடம் ரூ.30 லட்சம் இலஞ்சம் பிடுங்கிய சப் இன்ஸ்பெக்டர்

## பணி நீக்கம் செய்யப்பட்டு தலைமறைவாகி இருந்த நிலையில் கைது

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பு நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரை மிரட்டி 30 ஆயிரம் ரூபா பணத்தை லஞ்சமாக வாங்கிய – தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த – பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் தலை மறைவாகிய நிலையில் கடமையில் இருந்து இடை நிறுத்தப்பட்டார். அவரை நேற்றுப் புதன்கிழமை மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் வைத்துத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தெரிய வருவ தாவது:-

அந்தப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் சப் இன்ஸ்பெக் டர் ஒருவர் கடந்த முதலாம் திகதி நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு சிவில் உடையில் சென்று அதன் முதலாளிக்கு உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு உள்ளதாகவும் அதனால் கொழும்பில் இருந்து தன்னை சென்று சோதனையிடுமாறு தெரிவித்துள்ளனர் என்று கூறி அறைகளில் வாடகைக்கு இருந்தவர்களைச் சோதனையிட்டு அவர்களை மிரட்டியுள்ளார்.

இதனை தொடர்ந்து தனக்கு 50 ஆயிரம் ரூபா லஞ்சம் தருமாறு கோரி யிருக்கின்றார். ஹோட்டல் அலுவலர் தன்னிடம் இப்போது அந்த தொகை பணம் இல்லை, 30 ஆயிரம் ரூபா தான் தற்போது உள்ளது என தெரி வித்தபோது அதனை அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் இலஞ்சமாக வாங்கி எடுத்துக் கொண்டார்.

இது தொடர்பாக ஹோட்டலில் பொருத்தியிருந்த சிசிரி கமராவில் பதிவாகிய வீடியோ மற்றும் ஒலிப் பதிவுகளுடன் ஹோட்டல் உரிமையாளர் மாவட்ட உதவி பொலிஸ் மா அதிபரிடம் சென்று முறைப்பாடு செய்திருக்கின்றார். இதனையறிந்து சப் இன்ஸ்பெக்டர் உடனடியாக வாங்கிய 30 ஆயிரம் ரூபா பணத்தை அவருடன் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தரிடம் கொடுத்து அனுப்பி ஹோட்டல் உரிமை யாளரிடம் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து மீண்டும் உதவி பொலிஸ் மா அதிபரிடம் ஹோட்டல் உரிமையாளர் பணம் தமக்குத் திருப் பித் தரப்பட்ட விவகாரத்தை தெரிவித் தார். இது தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணை மேற் கொண்டு இலஞ்சம் வாங்கிய அந்தப் பொலிஸ் அதிகாரியைக் கைது செய் வதற்கான நடவடிக்கையை முன்னெ டுத்தனர். இந்த நிலையில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாதி கடமைக்கு வராது தலைமறைவாகியுள்ளார்.

கிழக்கு மாகாண சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் சம்பந்தப்பட்ட சப் இன்ஸ் பெக்டரை கடந்த திங்கட்கிழமை முதல் பணியில் இருந்து இடை நிறுத்திய மையுடன், தலைமறைவாகியுள்ள அவரைக் கைது செய்யுமாறு பொலிஸ ருக்கு உத்தரவிட்டார். இந்த நிலையில் தலை மறைவாகியிருந்தவர் நேற்றொ புதன்கிழமை மக்கக்களப்பு நகர்பகுதி யில் மோட்டார் சைக்கிளில் பிரயா ணித்த போது சுற்றிவளைத்துக் கைது செய்யப்பட்டார்.

அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸர் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கின் சபைகளில் ஆட்சியமைக்க தேசிய மக்கள் சக்திக்கும் அழைப்பாம்

## கயிறு விடுகின்றார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க



வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் வடக்கில் ஆட்சியமைக்க தேசிய மக்கள் சக்தியிடம் கோரிக்கை விடுத்துள்ளன என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

வடக்கில் உள்ள எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்திலும் எந்த அரசியல் கட்சியும்ம் முழுமையான பெரும்பான்மையைப் பெறாததால், அந்த கட்சிகள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் தெரிவிக்கையில் –

வடக்கில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய மக்கள் சக்தி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. சில கட்சிகள் வடக்கில் ஆட்சி அமைக்கத் தங்கள் ஆதரவை வழங்கியுள்ளன என்றும் அவர் கூறினார்.

வடக்கில் தேசிய மக்கள் சக்தி 150 இடங்களைப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

“பெரும்பான்மை இடங்களைப் பெற்ற கட்சிகள் கூட அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளன. கட்சியின் கொள்கையின்படி நாங்கள் அதைப் பற்றி முடிவு செய்வோம்” என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை வடக்கில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பெரும்பான்மை இடங்களை பெற்றுள்ளபோதிலும் ஆட்சி அமைப்பதற்கு சக தமிழ் கட்சிகளின் ஆதரவு தேவை என கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோயிலில் யானை மிதித்ததில் இரு பெண்களுக்குப் படுகாயம்




(என். புவியரசன்)

ஆலயத்திற்கு கொண்டு வந்த யானை மிதித்து பக்தர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் உள்ள ஆலயத்தில் நேற்றைய தினம் மஞ்ச உற்சவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது தெற்கில் இருந்து யானை கொண்டு வரப்பட்டு மஞ்சத்தின் முன்பாக அழைத்து வரப்பட்டுள்ளது.

மஞ்சம் முன்பாக தீப்பந்தங்களை எடுத்துச் சென்ற சமயம் யானை மிரண்டதில் இரு பெண்கள் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதன வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஓர் பெண்ணின் கால் பாதத்துக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.



நேற்று (07) மாலை முரசில் வெளியாகியிருந்த “வானம் சிவக்கப் பாடிய கவிஞன் புதுவை இரத்தின துரை நினைவலைகள்...!” என்றும் கட்டுரை பிரான்ஸில் இருந்து வி. ரி. இளங்கோவனால் எழுதப் பட்டது. தவறுதலாகப் பெயர் பிரசுரமாகவில்லை. தவறுக்கு வருந்துகிறோம்.

# றாகிங் எதிர்ப்பாளரின் மீது தாக்குதல் 7 மாணவர்களுக்குப் பிணை அனுமதி

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்டு காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 7 பல்கலைக்கழக மாணவர்களை பிணையில் விடுவிக்குமாறு ஹோமாகம நீதவான் நீதிமன்றம் நேற்றுப் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

ஹோமாகம பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 7 பல்கலைக்கழக மாணவர்களும் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏழு பல்கலைக்கழக மாணவர்களும் தலா மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான சரீரல் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி ஹோமாகம பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றிற்குள் அத்துமீறி நுழைந்த அங்கு தங்கியிருந்த அதே பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மற்றுமொரு மாணவனைத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த பல்கலைக்கழ மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், சந்தேக நபர்கள் 7 பேரும் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் ஹோமாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உலக வங்கியின் தலைவருடன் ஜனாதிபதியை சந்திப்பு







இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கிக் குழுமத்தின் தலைவர் அஜய் பங்காவிற்கும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகே உலக வங்கியின் தலைவர் ஒருவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்ள உலக வங்கி குழுமம் எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

டிஜிட்டல் மயமாக்கல், சுற்றுலாக் கைத்தொழில், விவசாயம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் துறை, உள்ளிட்ட குறுகிய காலத்தில் பயனடையக் கூடிய துறைகளை அடையாளம் கண்டு அதனை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி குறித்தும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் அந்த நோக்கத்திற்கான அரசாங்கத்தின் கொள்கைத் திட்டம் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

உலக வங்கி குழுமத்தின் விசேட ஆலோசகர் ட்ரெவர் கின்கெய்ட், இலங்கை, நேபாளம் மற்றும் மாலைதீவுகளுக்கான உலக வங்கியின் பணிப்பாளர் டேவிட் சிஸ்லன், சர்வதேச நிதி நிறுவனத்தின் தெற்காசியாவிற்கான பிராந்திய பணிப்பாளர் இமாத் ஃபகூரி,மாலைதீவு மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி கிவோர்க் சார்கஸ்ஜான் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக, தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அப்பொன்சு உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஏனைய எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் கொழும்பில் மேயர் பதவியைப் பிடிப்பதில் சஜித் தரப்புத் தீவிரம்!



கொழும்பு மாநகர சபையின் மேயரைத் தேர்ந்தெடுக்க ஏனைய எதிர்க்கட்சிகளின் ஆதரவை நாடப் போவதாக சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி கொழும்பு மாநகர சபையில் அதிக எண்ணிக்கையிலான இடங்களை வென்ற போதிலும், எதிர்க்கட்சிகளே பெரும்பான்மையைக் கொண்டுள்ளன. அதனால் மேயரைத் தேர்ந்தெடுக்க மற்ற எதிர்க்கட்சிகளின் ஆதரவை ஐக்கிய மக்கள் சக்தி கோரும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

உள்ளாட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கொழும்பு மாநகர சபையில் அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்று மொத்தம் 48 இடங்களை வென்றது.

ஐக்கிய மக்கள் சக்தி 58,375 வாக்குகளைப் பெற்று 29 இடங்களைப் பெற்றது. அதே நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி 26,297 வாக்குகளைப் பெற்று 13 இடங்களைப் பெற்றது. பொதுஜன பெரமுன மற்றும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் முறையே 5 மற்றும் 4 இடங்களைப் பெற்றுள்ளன.

இதனால் ஆளுங்கட்சியைவிட எதிர்க்கட்சிக்கு அதிக ஆசனங்கள் உள்ளன. இதனால் கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தியின் அதிகாரத்தை நிறுவும் முயற்சியில் அக்கட்சி ஈடுபட்டுள்ளது.

இலங்கையின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய உள்ளூராட்சி அதிகாரசபையாக கொழும்பு மாநகர சபை உள்ளது. இலங்கையின் மிகப் பெரிய நகரம் கொழும்பு என்பதுடன், நிதி மையமாகவும் உள்ளது. இதனால் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு கொழும்பு மாநகரசபையின் அதிகாரம் மிகவும் முக்கியமாகும். ஆனால், பெரும்பான்மை எதிர்க்கட்சிகள் வசமிருப்பதால் ஆளுங்கட்சி நெருக்கடிகளைஎதிர்கொள்ளும்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

# பகிடிவதை தொடர்பில் அலட்சியம் காண்பித்த அதிகாரிகளும் பொறுப்புக்கூறவேண்டும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தல்

அண்மையகாலத்தில் பதிவான சில பகிடிவதை சம்பவங்கள் உரிய கல்விக் கட்டமைப்புக்களின் அதிகாரிகளின் அலட்சியத்தினால் நடைபெற்றிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் அவ்வதிகாரிகளும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் பகிடிவதை காரணமாக பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பில் தீவிர கரிசனையை வெளிப்படுத்தி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

“மிகமோசமானதும், மனிதத்தன்மையற்றதுமான பகிடிவதையின் காரணமாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த மாணவன் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் நாம் மிகுந்த கவலையடைகிறோம்.

எந்தவொரு கல்வியியல் கட்டமைப்புக்களிலும் எந்தவொரு மாணவருக்கு எதிராகவும் பகிடிவதை மற்றும் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அது நாட்டின் சட்டத்தை மாத்திரமன்றி, அடிப்படை மனிதாபிமானக் கோட்பாடுகளையும் மீறுகின்ற செயலாகும்.

அதேவேளை அண்மையகாலத்தில் பதிவான சில பகிடிவதை சம்பவங்கள் அக்கட்டமைப்புக்களின் அதிகாரிகளின் புறக்கணிப்பு அல்லது அலட்சியத்தினால் நடைபெற்றிருக்கிறது என நாம் கருதுவதுடன், அவர்களும் இச்சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

அதேபோன்று 1998 ஆம் ஆண்டு 20ஆம் இலக்க கல்விக்கட்டமைப்புக்களில் பகிடிவதை மற்றும் ஏனைய வன்முறை தடுப்புச்சட்டத்தின் சரத்துக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படாமை குறித்து நாம் தீவிர கரிசனை கொண்டிருக்கிறோம். இவ்வாறான சட்டவிரோத பகிடிவதை செயற்பாடுகளை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்விக் கட்டமைப்புக்களின் அதிகாரிகள் முன்னெடுக்கவேண்டும்.

அத்தோடு மேற்படி சம்பவம் தொடர்பில்சமனலவெளபொலிஸாரினால்பலாங்கொடை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளை உன்னிப்பாகக் கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.


உ
குருபாதம் துணை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
இரண்டாவது குரு மகா சன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிகள் சுவாமிகள்

நினைவு பிரார்த்தனை வைபவமும் அஸ்தி பிரதிஷ்டையும்

09.05.2025 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு
சுவாமிகளின் நினைவு பிரார்த்தனையும், அஸ்தி பிரதிஷ்டையும்,
மதியம் 12 மணிக்கு அன்னதானமும் நடைபெறும்.
அனைவரையும் கலந்து கொண்டு சுவாமியின்
திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.



ஆதீன ஆளுநர் சபை,
நல்லை ஆதீனம், நல்லூர், யாழ்ப்பாணம்



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிறந்த பூமியான வல்வெட்டித்துறையையும் வெற்றி கொண்டு விட்டோம் என்ற அளவுக்கு மமதைப் பேச்சுக்கள் எல்லை மீறின.

இந்தப் பின்புலத்தில்தான் எல்லாத் தரப்புக்களும் சேர்ந்து தமிழ்த் தேசியம் மீதான மக்களின் உணர்வெழுச்சியை உசுப்பேத்தித் தட்டிவிட்டன.

தமிழரசு கட்சி, தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி போன்றவை எல்லாம் தங்கள் வாக்கு வங்கியை நாடாளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இரட்டிப்பாக தங்களுடைய வாக்குகளை இப்போது உயர்த்திக் கொண்டுள்ளன.

சரி, யாழ்ப்பாணத்தில் கொக்கரித்த திசை காட்டியை மட்டம் தட்டி வைத்தவர்கள் யார்?

புள்ளி விவரங்கள் – பெறுபேறு போன்றவற்றின் அடிப்படையில் பார்த்தால் தமிழரசுக் கட்சிக்கு மட்டும்தான் அந்த உரித்து இருப்பதாகக் கூறலாம்.

தென்னிலங்கை பௌத்த – சிங்களக் கட்சியான தேசிய மக்கள் சக்தியை யாழ்ப்பாணத்தில் முந்தியிருக்கும் ஒரே கட்சி தமிழரசுதான்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் மொத்தமுள்ள 409 ஆசனங்களில் 135 ஆசனங்களை தமிழரசு தனித்துப் பெற்றிருக்கிறது. தேசிய மக்கள் சக்தி பெற்ற 81 ஆசனங்களை விட அதிக ஆசனங்களை பெற்றது தமிழரசுதான். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தமிழ் மக்கள் பேரவை 79 ஆசனங்களைத்தான் பெற்றது. ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியால் (சங்கு சின்னக் கட்சியால்) அதிலும் குறைந்த ஆசனங்களைத்தான் பெற முடித்தது. ஆக ஆசனக் கணக்கில் தேசிய மக்கள் சக்தியைப் பின்தள்ளி, முன்னிலைக்கு வந்த ஒரே கட்சி தமிழரசு மட்டும்தான்.

அதேபோல வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் பார்த்தாலும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி முதலிடத்துக்கு வந்திருந்தது .அதனை இப்போது உள்ளூராட்சித் தேர்தலில் இரண்டாம் இடத்திற்கு தள்ளியது இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டும்தான். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தமிழ்த் தேசிய பேரவையை விட – அதேபோல ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை விட தேசிய மக்கள் சக்தி – யாழ் மாவட்டத்தில் கூடிய வாக்குகளை எடுத்திருக்கின்றது.

அதிலும் இந்த வெற்றியை தமிழரசு வேறு கூட்டுகள் இல்லாமல் தனி ஒரு கட்சியாக ஈட்டி இருப்பது அதன் தனித்துவத்துக்குச் சிறப்பு.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஒவ்வொரு பிரதேசத்திலும் செல்வாக்கு உள்ள பிரதிநிதிகளை தேடித் தேடி அரவணைத்து, அதன் மூலம் இந்தப் பெறுபேறுகளை எட்டியிருக்கின்றது.

சாவகச்சேரியில் அருந்தவபாலன் ஆசிரியர், நல்லூரில் ஐங்கரநேசன், வல்வையில் சிவாஜிலிங்கம், வட்டுக் கோட்டையில் சரவணபவன், தீவகத்தில் கே.வி.தவராஜா என்று பொறுக்கிய தரப்புகளைச் (assorted cases) சேர்த்துத் தான் இந்த வாக்குகளை தமிழ் தேசியப் பேரவையினால் திரட்ட முடிந்தது.

அதேபோல ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் தேசிய மக்கள் கட்சியின் வாக்கு மற்றும் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கையில் குறைந்த அளவு பெறுபேறுகளே கிடைத்தன.

அதற்கும் கூட பல்வேறு தரப்புக்களின் கூட்டுதான் பின்னணி. ஏற்கனவே ஜனநாயகப் போராளிகள், இயக்கம் என்று இருந்த அந்தக் கூட்டு, கிளிநொச்சியில் சந்திரகுமாரையும் சேர்த்துக் கொண்டதால் அந்த கூட்டுக்கும் கணிசமான வாக்குகளும் ஆசனப் பெறுபேறுகளும் கிடைத்திருக்கின்றன.

ஆக பல தரப்புகளையும் சேர்த்த அந்தக் கூட்டமைப்பினால் தேர்தலை எதிர்கொண்டு தேசிய மக்கள் சக்தியைத் தாண்டி முன்னேற முடியவில்லை.

அந்த வகையில் தனித்து நின்று சாதனை படைத்திருக்கும் தமிழரசுக் கட்சி பாராட்டுக்குரியது.

---

## தேசிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் சக்தி அதிகப்படியான வாக்குகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

அதன்படி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கிய தேசிய மக்கள் சக்தி கட்சியானது 45 இலட்சத்து 3 ஆயிரத்து 930 வாக்குகளையும் 3 ஆயிரத்து 927 உறுப்பினர்களையும் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி 22 இலட்சத்து 58 ஆயிரத்து 480 வாக்குகளையும் ஆயிரத்து 767 உறுப்பினர்களையும் பெற்று இரண்டாவது நிலையில் உள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி இலட்சத்து 54 ஆயிரத்து 517 வாக்குகளையும்742உறுப்பினர்களையும்பெற்றுமூன்றாவது நிலையில் உள்ளது.

---

## எதிர்க்கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறானதொன்றைச் செய்திருக்கலாம். நான் தெரிவித்தது போல் எதிர்க்கட்சிகள் ஒன்றிணையாததால் மக்கள் பிளவுபட்டு வாக்களித்துள்ளனர்.

ஐந்து வருடங்களுக்குப் பின்னர் நாங்கள் யானை சின்னத்தில் போட்டியிட்டோம். இதை ஒரு தொடக்கமாகக் கருதலாம். சில பகுதிகளில் எமது பெறுபேறுகள் திருப்தியாக உள்ளன. இப்போது ஐக்கிய தேசியக் கட்சி புதிதாகச் செயற்பட வேண்டியுள்ளது. இப்போது எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடி மக்களுக்கு சில வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

நான் தேர்தல் பிரசாரப் பணிகளில் பங்கேற்கவில்லை. இதைச் செயற்படுத்த இளம் தலைவர்களுக்குப் பொறுப்பு வழங்கினேன். இது ஒரு சோதனை. நல்ல இடங்கள் போன்று கெட்ட இடங்களும் உண்டு. இப்போது இருக்கும் பலத்துடன் எப்படி முன்னேறுவது என்று நாங்கள் சிந்திக்க வேண்டும்.

யானை சின்னத்தில் முன்வரும்போது மக்கள் வாக்களிக்க வருவார்கள் என சிலர் தெரிவித்தனர். யானை சின்னத்தில் முன்வந்ததால் மாத்திரம் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பது தற்போது தெரிந்துகொள்ளலாம். இப்போது கட்சியின் புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்த வேண்டும். இந்தக் கட்சியை 40, 50 வயது நிரம்பியவர்களால் கட்டியெழுப்ப வேண்டும். இதற்குப் பிறகு இளைஞர்கள் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு முன்னுக்குச் செல்ல வேண்டும். ஐக்கிய மக்கள் சக்திக்கும் கடந்த முறை கிடைத்த வாக்குகள் இந்த முறை கிடைக்கவில்லை." – என்றார்.

---

## நிரந்தர தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மட்டக்களப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியானது வடக்கு, கிழக்கிலே அமோகமான வெற்றியைப் பெற்றிருக்கின்றது.

நாடு யாரிடமாவது இருக்கட்டும், தமிழர் தாயகம் தமிழரசோடு இருக்க வேண்டும் என்று நாங்கள் தேர்தல் பரப்புரைக் காலத்தில் சொன்னதற்கமைய வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற தமிழ் மக்கள் எங்களுக்கு அமோகமான வெற்றியைத் தந்திருக்கின்றார்கள். இது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வெற்றி என்பதைத் தாண்டி இது தமிழர்களுடைய எதிர்காலத்துக்கான ஆணையொன்றை தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள்.

நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை அடைய வேண்டும் என்ற எங்களுடைய இலக்குக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணை தந்திருக்கின்றார்கள். அந்தவகையில் விரைவில் மாகாண சபைத் தேர்தலையும் நடத்த வேண்டும் என்று நாங்கள் அரசை வலியுறுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கில் நாங்கள் கூடுதலான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்க இருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாங்கள் போட்டியிட்ட பதினொரு சபைகளிலும் ஆசனங்களைப் பெற்றிருக்கின்றோம். பெரும்பான்மையாகத் தமிழர்கள் இருக்கின்ற அனைத்து பிரதேச சபைகளிலும் நாங்கள் பெரும்பான்மையான ஆசனங்களை வென்றிருக்கின்றோம். அனைத்து பிரதேச சபைகளிலும் ஆட்சியமைக்கக்கூடிய சூழல் இருக்கின்றது. அத்துடன் நாங்கள் சிறுபான்மையாக இருக்கின்ற இரண்டு பிரதேச சபைகளிலும் ஆசனங்களைப் பெற்றிருக்கின்றோம்.

இன்று (நேற்று) மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து முதல் கட்டமாகப் பட்டியல் ஆசனங்கள், சபை அமைத்தல், யாருடன் இணைவது என்பது பற்றி கலந்துரையாடவுள்ளோம்.

நாளை (இன்று) நாங்கள் போட்டியிட்ட அனைத்து சபை உறுப்பினர்களையும் ஒவ்வொரு சபையாக அழைத்து, அந்தந்தச் சபைகளில் பட்டியல் உறுப்பினர்கள் யார் என்றும், தவிசாளர், பிரதி தவிசாளர் பற்றி எவ்வாறு தீர்மானம் எடுப்பது என்பது பற்றியும், யாருடன் நாங்கள் இணைந்து ஆட்சியமைப்பது என்பது பற்றியும் கலந்துரையாடவுள்ளோம்.

எதிர்வரும் இரண்டு, மூன்று வாரங்களுக்குள் இலங்கைத் தமிழரசுக் கட்சி அனைத்து சபைகளிலும் ஆட்சியமைக்கக்கூடிய ஒரு வியூகத்தை நாங்கள் அமைக்க இருக்கின்றோம்." – என்றார்.

# அநுர அரசு அதிக வாக்குகளைப் பெற்றாலும் 164 சபைகளில் மட்டுமே ஆட்சியமைக்க முடியும்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சுட்டிக்காட்டு

“அநுர அரசு பெற்றுக்கொண்ட வாக்குகள் வெறும் இலக்கங்களாக மாத்திரமே உள்ளன. அதிகாரம் எதிர்க்கட்சிகளிடமே உண்டு. 164 உள்ளூராட்சி மன்றங்களில் மாத்திரமே அரசுக்கு ஆட்சியமைக்க முடியும். 170 மன்றங்களில் அரசால் ஆட்சியமைக்க முடியாது. கட்சி பேதங்களை மறந்து சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து 170 உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதற்குத் தயார்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“அநுர அரசு கூறுவது பொய் என்பது தமக்குத் தெரியும் என்பதை மக்கள் இந்தத் தேர்தலில் உணர வைத்திருக்கின்றனர். நாடாளுமன்றத்தில் 159 பெரும்பான்மையைக் கொண்டுள்ள இந்த அரசுக்கு மக்கள் இந்தச் செய்தியை வழங்கியிருக்காவிட்டால் அடுத்த 4 ஆண்டுகளுக்கும் இவர்களின் பொய்கள் தொடர்ந்திருக்கும். எவ்வாறிருப்பினும் மக்கள் அதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றனர்.

தற்போது அநுர அரசு பெற்றுக்கொண்ட வாக்குகள் வெறும் இலக்கங்களாக மாத்திரமே உள்ளன. அதிகாரம் எதிர்க்கட்சிகளிடமே உண்டு. 164 உள்ளூராட்சி மன்றங்களில் மாத்திரமே அரசுக்கு ஆட்சியமைக்க முடியும். 170 மன்றங்களில் அரசால் ஆட்சியமைக்க முடியாது. ஜனாதிபதியும், பிரதமரும் மக்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த போதிலும், அவை நடைமுறையில் சாத்தியப்படவில்லை.

ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் செயலாளர் ரில்வின் சில்வா வேறு எந்தக் கட்சிகளின் ஆதரவும் தமக்குத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அவர்கள் கோரினாலும் ஆதரவளிப்பதற்கு நாம் தயாராக இல்லை என்பதை ரில்வின் சில்வாவிடம் தெரிவித்துக்கொள்கின்றோம். பொய் கூறி மக்களை ஏமாற்றும் உங்களுடன் இணைய வேண்டிய தேவை எமக்கில்லை. ஆனால், கட்சி பேதங்களை மறந்து சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து 170 உள்ளூராட்சி



மன்றங்களை அமைப்பதற்கு நாம் தயார்.

கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் 67 இலட்சம் வாக்குகளை அரசு பெற்றுக்கொண்டது. ஆனால், இம்முறை தேர்தலில் 40 இலட்சம் வாக்குகள் மாத்திரமே கிடைத்துள்ளன. 6 மாதங்களில் 27 இலட்சம் மக்கள் சகோதரர் அநுரகுமார திஸாநாயக்கவை நிராகரித்துள்ளனர். எனவே, இனியாவது பொய் கூறுவதை நிறுத்துங்கள். ஆர்ப்பாட்டத்தின் மூலம் கோட்டாபய ராஜபக்ஷவைத் துரத்தியதைப் போன்று ஆட்சியைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. அநுர அரசு அதன் தவறுகளைத் திருத்திக் கொண்டு ஆட்சியை முன்னெடுக்க வேண்டும்.” – என்றார்.



# கெஹெலியவுக்கு விளக்கமறியலில்

லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் நேற்று ஆணைக்குழுவில் முன்னிலையான பின்னரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



# பிரசன்ன ரணவீரவுக்கு விளக்கமறியல்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மஹர நீதவான் காஞ்சனா என்.சில்வாவின் முன்னிலையில் நேற்று பிற்பகல் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரசன்ன ரணவீர உள்ளிட்ட ஏனைய சந்தேகநபர்களை கைது செய்யுமாறு மஹர நீதவான் காஞ்சனா என் சில்வா கடந்த திங்கள் கிழமை பகிரங்க பிடியாணை உத்தரவை பிறப்பித்தார்.

அரசாங்க நிர்மாணத்திற்காக விடுவிக்கப்பட்ட காணியை தனியாரொருவருக்கு விற்பனை செய்வதற்கு முற்பட்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# மற்றுமொரு தோல்வியடைந்த அரசாங்கத்தை எதிர்கொள்ள இலங்கைக்கு திராணியில்லை

## அலி சப்ரி தெரிவிப்பு



"மீண்டுமொரு தோல்வியடைந்த அரசாங்கத்தை எதிர்கொள்வதற்கு இலங்கைக்குத் திராணியில்லை. எனவே தற்போதைய அரசாங்கம் சிறப்பாக செயற்படவேண்டுமாயின், அவர்கள் பேசுவதைக் குறைத்து, அதனை செயலில் காண்பிக்க வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளார்.

நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களில் ஆளும் தேசிய மக்கள் சக்தி தெற்கில் வெற்றி பெற்றிருந்தாலும், பல சபைகளில் ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மையைப் பெறத்தவறியிருக்கிறது. இந்நிலையில் தேர்தல் முடிவுகள் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கின்றார் அலி சப்ரி. அப்பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"ஊடகக் கண்காட்சியை" நடாத்துவதன் ஊடாக எப்போதும் நாட்டை ஆழமுடியும் என நீங்கள் கருதியிருந்தால், அது முற்றிலும் தவறானதாகும். நீங்கள் கூறும் விடயங்களுக்கு செயல் வடிவம் கொடுப்பதன் ஊடாக வீதிகளில் இருக்கும் மக்களால் உணரக்கூடிய மாற்றத்தை உருவாக்குங்கள். சாதாரண மக்கள் மெச்சக்கூடியவகையில் சட்டம் மற்றும் ஒழுங்கு, செயற்திறன்மிக்க பொதுநிர்வாகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை நிலைநிறுத்துங்கள்.

காலவோட்டத்தில் மக்கள் கடந்தகாலத்தைப் பற்றிய பேச்சுக்களில் ஆர்வம் இழப்பார்கள். அவர்கள் கடந்தகால அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மகிழ்ச்சியடையவில்லை என்பதனாலேயே தற்போதைய அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அன்றேல் இதுவும் வெறுமனே "நல்லாட்சி அரசாங்கம் – 2" ஆக மாறிவிடும்.

இந்த உள்ளூராட்சிமன்றத்தேர்தல் முடிவுகள் ஒரு அபாய எச்சரிக்கையாகும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப்பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ 18 மாதங்களில் பதவியை இராஜினாமா செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் அடுத்தடுத்து தோல்வி கண்டிருக்கும் நிலையில், மீண்டுமொரு தோல்வியடைந்த அரசாங்கத்தை எதிர்கொள்வதற்கு இலங்கைக்குத் திராணியில்லை. எனவே தற்போதைய அரசாங்கம் சிறப்பாக செயற்படவேண்டுமாயின், அவர்கள் பேசுவதைக் குறைத்து, அதனை செயலில் காண்பிக்கவேண்டும்.

நாமனைவரும் தேர்தல்களில் அரசியல் செய்வோம். இருப்பினும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு சகலரும் ஒன்றிணைந்து செயலாற்றுவோம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

# சகல உள்ளூராட்சிமன்றங்களிலும் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம்

உள்ளூராட்சிமன்றத்தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம், உள்ளூராட்சிமன்றங்களில் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்யவேண்டிய சட்டரீதியான கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது.

எனவே ஒவ்வொரு உள்ளூராட்சிமன்றமும் இளம் பெண்கள் உள்ளடங்கலாக 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதனை தேர்தல்கள் ஆணைக்குழு இறுக்கமாக நடைமுறைப்படுத்தவேண்டும். அதிலிருந்து தவறும் அரசியல் கட்சிகள் பொறுப்புக்கூறச்செய்யப்படவேண்டும் என 34 பெண்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இதுகுறித்து மன்னார் பெண்கள் அபிவிருத்திப்பேரவை, சமூக அபிவிருத்தி நிலையம், கிழக்கு சமூக அபிவிருத்தி நிதியம், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு, முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிதியம் என்பன உள்ளடங்கலாக 34 பெண்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

"உள்ளூராட்சிமன்றத்தேர்தல்கள் முடிவடைந்திருப்பதுடன், உள்ளூராட்சிமன்றங்களில் பெண்களின் 25 சதவீத கட்டாய பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை இது மீளநினைவூட்டியிருக்கிறது. இம்முறை தேர்தலில் வாக்களித்தோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும், பிரசாரம், வாக்களிப்பு, தேர்தலில் போட்டியிடல், போனஸ் ஆசனத்தில் பதிவுசெய்யப்படல் என தேர்தல் செயன்முறையின் சகல கூறுகளிலும் பெண்கள் உத்வேகத்துடன் பங்கேற்றமையைக் காணமுடிந்தது. இதற்கு முன்னர் உள்ளூராட்சிமன்றங்களில் அங்கம்வகித்த அனுபவத்தைக் கொண்ட பெண்கள் பலர் இம்முறை கட்சிகளின் ஊடாகவோ, சுயேச்சையாகவோ போட்டியிட்டனர்.

அதேவேளை இத்தேர்தலில் அநேகமான பெண்கள் அதிகளவு வாக்குகளைப் பெற்றிருப்பதையும், மீண்டும் உள்ளூராட்சிமன்ற அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிருப்பதையும் அவதானிக்கமுடிகிறது.




இருப்பினும் பல சிறிய கட்சிகள் ஒன்று அல்லது இரண்டு ஆசனங்களையே கைப்பற்றியிருப்பதானது, "ஒவ்வொரு மூன்று ஆசனங்களுக்கு ஒரு பெண்" என்ற பிரதிநிதித்துவ வீதத்தை உறுதிசெய்வதில் சிக்கலை தோற்றுவித்திருக்கிறது. கடந்தகால தேர்தல் நடைமுறைகளை அவதானிக்கையில், பெரும்பாலான கட்சிகள் பெண்களை வேட்பாளர்களாக முன்மொழிவதில் தயக்கம் காண்பித்திருப்பதுடன், சில உள்ளூராட்சிமன்றங்கள் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதற்கு முழுமையாகத் தவறியிருந்தன.

இருப்பினும் உள்ளூராட்சிமன்றத்தேர்தல்கள் சட்டத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம், 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்யவேண்டிய சட்டரீதியான கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. இந்நிலையில் ஒவ்வொரு உள்ளூராட்சிமன்றமும் இளம் பெண்கள் உள்ளடங்கலாக 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதனை தேர்தல்கள் ஆணைக்குழு கட்டாயமாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

குறித்தவொரு கட்சி இரண்டு ஆசனங்களை வென்றிருப்பின், அவற்றில் குறைந்தபட்சம் ஒரு ஆசனமேனும் பெண் பிரதிநிதிக்கு ஒதுக்கப்படவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தவேண்டும். இக்கட்டாய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கு அதற்குரிய அங்கீகாரம் பகிரங்கமாக வழங்கப்படும் அதேவேளை, அதனை உறுதிப்படுத்தாத கட்சிகள் பொறுப்புக்கூறச்செய்யப்படவேண்டும்." என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாகாணத் தேர்தல்கள் எப்போது?

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் என்று மூன்று தேர்தல்கள் எட்டுப் பத்து மாதங்களுக்குள் நடந்து முடிந்து விட்டன.

ஆளும் தேசிய மக்கள் சக்தி தரப்புக்கு முதல் இரண்டு தேர்தல்களும் ஏறுமுகமாக இருந்தன. மூன்றாவது தேர்தலில் சிறிய அடி விழுந்திருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் இன்னும் ஒரு தேர்தல் நிலுவையில் உள்ளது. சுமார் ஏழெட்டு ஆண்டுகள் அது நிலுவையில் இருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல்தான் அது.

நாங்கள் அதிகாரத்துக்கு வந்ததும் ஆறு மாதங்களுக்குள் அந்தத் தேர்தல்களை எல்லாம் நடத்தி முடிப்போம் என்று வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, அந்த நான்காவது தேர்தல் தொடர்பில் இப்போது என்ன செய்யப் போகின்றது என்பதுதான் கேள்வி.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிவதற்கு முன்னரே அந்த நான்காவது தேர்தலான மாகாண சபை விவகாரத்தை ஒட்டி ஒரு சறுக்கல் ஏற்கனவே ஆளும் தரப்பிடம் இருந்து வந்திருந்தது. 'சுமார் ஒரு வருட காலப்பகுதியில் மூன்று தேர்தல்களை நடத்தி முடித்து விட்டோம். எந்த நேரமும் தேர்தலை நடத்திக் கொண்டிருக்க முடியாது. அதனால் மாகாண சபைத் தேர்தல் அடுத்த ஆண்டில்தான்' என்று ஆளும் தரப்பிலிருந்து ஒரு கதை அவிழ்த்து விடப்பட்டிருந்தது.

ஆனால் இதற்கு முன்னர் தமிழ்த் தரப்பு எம்பிக்களைச் சந்தித்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்த ஆண்டு இறுதிக்குள் எப்படியும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற சாரப்பட உறுதி கூறியிருந்தார்.

மாகாண சபை தேர்தல் இனி எப்போது என்பதுதான் இப்போதைய கேள்வி.

ஆளும் தரப்பு நினைத்தால் அந்தத் தேர்தலை நடத்துவதற்கான ஒரு வரிச் சட்டத்தை அடுத்த இரண்டு மாதத்துக்குள் நிறைவேற்றி, இந்த ஆண்டுக்குள்ளேயே மாகாண சபைத் தேர்தலை நாடு முழுவதும் நடத்தி முடித்து விடலாம்.

ஆனால் பொதுத் தேர்தலில் கிட்டிய மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்ற வலுவான நிலையில் இருந்து ஆளும் தரப்பின் ஆதரவுத் தளம் சறுக்கிக் கொண்டு வருகையில், இன்னொரு தேர்தலை எதிர்கொண்டு மேலும் அடிச்சறுக்கலுக்கு முகம் கொடுப்பதா என்ற கேள்வி - பயம் - பீதி - ஆளும் தரப்பினருக்கு இருப்பதாகத் தெரிகிறது. அதனால் எப்படியும் மாகாண சபை தேர்தலைத் தள்ளிப்போடும் எத்தனம்தான் ஆளும் தரப்பில் கட்டவிழும் என எதிர்பார்க்கலாம்.

ஆயினும் பொதுத் தேர்தல் சமயத்தில் உச்சத்தில் இருந்த தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு, இனி கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையை நோக்கி நகரும் என்பதுதான் அவதானிகளின் கணிப்பு.

அந்தப் பின்புலத்தில், எவ்வளவு விரைந்து தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக அதை நடத்துவதுதான் ஆளும் தரப்புக்கு சாதகமாக இருக்கும். கொஞ்சம் கொஞ்சமாகச் சறுக்கிச் செல்லும் பொது மக்களின் ஆதரவு, முழுமையாகக் கையை விட்டுப் போகும் முன்னர், இருக்கின்ற ஆதரவுத் தளத்தில் தேர்தலை நடத்தி, மாகாண சபைகளில் தனது ஸ்திர நிலையை ஓரளவுக்காவது உறுதிப்படுத்த முயற்சிப்பதுதான் ஆளும் தரப்புக்கு நல்ல அரசியல் தந்திரமாக இருக்கும். ஆனால், தேர்தல் முடிவுகளை கண்டு அஞ்சும் பீதி மனப்பான்மை ஆட்சித் தலைமைக்கு வந்துவிட்டால் தேர்தல்கள் தள்ளிப் போவது தவிர்க்க முடியாதவையாகத்தான் இருக்கும்....!





# 25 நிமிடங்கள் 9 முகாம்கள் அழிப்பு; 70 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்

இந்திய இராணுவம் மேற்கொண்ட 'ஒபரேஷன் சிந்தூர்' 25 நிமிடங்களில் நடத்தி முடிக்கப்பட்டதாகவும், 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து நடத்தப்பட்ட 24 ஏவுகணைத் தாக்குதல்களில் 70 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு – காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். லஷ்கர்-இ-தொய்பா நடத்திய இந்த தாக்குதலின் பின்னணியை உறுதிப்படுத்திய இந்திய அரசு, பாகிஸ்தானில் இயங்கி வரும் இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாத அமைப்புகளின் முகாம்களை குறிவைத்து தாக்க இராணுவத்துக்கு உத்தரவிட்டது.

இதையடுத்து, 'ஒபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் இந்திய இராணுவம் தனது தாக்குதல்களை திட்டமிட்டது. இந்தத் தாக்குதல் நேற்று அதிகாலை 1.05 மணிக்குத் தொடங்கி 1.30 மணிக்குள் நிறைவடைந்தது. 9 பயங்கரவாத முகாம்கள் குறிவைக்கப்பட்டன. இவற்றின் மீது தாக்குதல் நடத்த 24 ஏவுகணைகள் ஏவப்பட்டன. இதில், 9 பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதோடு, 70 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

## 'ஒபரேஷன் சிந்தூர்' வெற்றி

இராணுவத்தின் 24 ஏவுகணைகளும் துல்லிய தாக்குதல்களை நடத்தியதாகவும், பயங்கரவாத கட்டமைப்பின் பகுதிகளாக இருந்த கட்டளை மையங்கள், பயிற்சி முகாம்கள், ஆயுதக் கிடங்குகள், நிலை வசதிகள் ஆகியவை அழிக்கப்பட்டதை உளவுத் துறை உறுதிப்படுத்தியதாகவும் அரசு தெரிவித்துள்ளது. இந்தியாவின் இராணுவ நடவடிக்கை விரிவானதாக இருந்தபோதிலும், பாகிஸ்தானின் எந்த இராணுவ கட்டமைப்புகளும் குறிவைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏவுகணைகள் தரையிலிருந்தும், வான்வழியாகவும் ஏவப்பட்டன. கண்காணிப்பு ட்ரோன்கள் மூலம் தாக்குதல்கள் நேரலையாக கண்காணிக்கப்பட்டன. இதன்மூலம், குறைந்த பட்ச பொதுமக்கள் உயிரிழப்புகளுடன் இலக்குகள் குறிவைக்கப்பட்டன. பயங்கரவாத முகாம்களை அழித்தொழிக்க பல போர்முனைகள் ஒரே நேரத்தில் தாக்கின. ஒபரேஷன் சித்தூரில் தாக்குதல் நடத்திய இலக்குகள் குறித்து மத்திய அரசு பகிர்ந்துள்ள தகவலின்படி 9 இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

# பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு சிறந்த பதிலடி வழங்கப்பட்டுள்ளது



## பிரதமர் மோடி பெருமிதம்

துல்லியமாக திட்டமிடப்பட்டு எந்த ஒரு சிறு தவறும் நடைபெறாத வண்ணம் பஹல்காம் தாக்குதலுக்கு சிறப்பான பதிலடியை நமது இராணுவம் வழங்கியுள்ளது என்று 'ஒபரேஷன் சிந்தூர்' குறித்து பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

'ஒபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையைத் தொடர்ந்து இன்று காலை அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. காலை 11 மணியளவில் நாடாளுமன்ற நூலக கட்டடத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தனது எக்ஸ் பக்கத்தில் உறுதிப்படுத்தியுள்ளார். மேலும், 'ஒபரேஷன் சிந்தூர்' எதிரொலியாக, பிரதமர் மோடி அவரது ஐரோப்பிய பயணத்தை ஒத்திவைத்துள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கது.

நேற்று அதிகாலை இந்திய பாதுகாப்புப் படைகள் 'ஒபரேஷன் சிந்தூர்' இராணுவ நடவடிக்கையைத் தொடங்கி, பாகிஸ்தானிலும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு – காஷ்மீர் பகுதியிலும் உள்ள பயங்கரவாத கட்டமைப்புகளைத் தாக்கின. மொத்தத்தில் 9 பயங்கரவாத முகாம்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டன. இந்தியாவின் நடவடிக்கைகள் துல்லியமானவை. அத்துமீறல் இல்லாதவை.

இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற உறுதிமொழி நிறைவேற்றப்படும்' என்று மத்திய அரசு தெரிவித்திருந்தது. இதன் தொடர்ச்சியாக, 'ஒபரேஷன் சிந்தூர்' குறித்து விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

'ஒபரேஷன் சிந்தூர்' குறித்து விவாதிக்க பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சர்களின் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அப்போது, "துல்லியமாக திட்டமிடப்பட்டு எந்த ஒரு சிறு தவறும் நடைபெறாத வண்ணம் பஹல்காம் தாக்குதலுக்கு சிறப்பான பதிலடியை நமது இராணுவம் வழங்கியுள்ளது. முன்கூட்டியே செய்யப்பட்ட விரிவான தயாரிப்புகளின் அடிப்படையை கண்டிப்பாக பின்பற்றி இராணுவம் இப்பணியை மேற்கொண்டது. பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்காத பயங்கரவாதிகளை மட்டும் குறிவைத்து வேட்டையாடிய நமது இராணுவத்தின் செயல் மிகவும் பாராட்டத்தக்கது. பெருமை கொள்ளத்தக்கது" என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

# புதிய பாப்பரசரை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு





புதிய பாப்பரசரை தெரிவு செய்வதற்காக கர்தினால்கள் வத்திக்கானில் ஒன்றுகூடியுள்ளனர்.

வத்திக்கானிலுள்ள சிஸ்டைன் தேவாலயத்தில் புதிய பாப்பரசர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பு நேற்று ஆரம்பமானது.

உலகளாவிய ரீதியில் 252 கத்தோலிக்க கர்தினால்களில் 135 பேர் கூடி புதிய பாப்பரசரை தெரிவு செய்யவுள்ளனர்.

நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பில் கர்தினால் ஒருவர் பெரும்பான்மையான வாக்குகளை பெற்றால் அவர் அடுத்த பாப்பரசராக அறிவிக்கப்படுவார்.

பாப்பரசர் தெரிவு செய்யப்பட்டால் வத்திக்கானின் சிஸ்டைன் தேவாலயத்திலிருந்து வெள்ளை புகையும் தெரிவு செய்யப்படவில்லை எனில் கறுப்பு புகையும் வெளியேறும்.

# இரு நாள்கள் போர்நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு ரஷ்யா திட்டம்



மே8முதல்10ஆம்திகதிவரைஉக்ரைனுடனான போரை நிறுத்த ரஷ்யா இன்னமும் திட்டமிட்டு வருகிறது ஆனால், உக்ரைன் தாக்கினால் பதிலடி கொடுக்கப்படும் என்று கிரெம்ளின் எச்சரித்துள்ளது.

போர் நிறுத்தம், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உத்தரவுக்கு ஏற்ப இடம்பெறுகிறது.

கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி இரண்டாவது உலகப் போரில் சோவியத் யூனியன் வெற்றி பெற்று 80வது ஆண்டைக் குறிக்கும் வகையில் அதிபர் புட்டின் மூன்று நாள் போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தார்.

இந்நிலையில் மே 8 முதல் 10 வரை மூன்று நாள் போர் நிறுத்தம் இடம்பெறும் என்று கிரெம்ளின் முன்னதாக தெரிவித்திருந்தது.

இதேவேளை,போர்நிறுத்த நாள்களில் சீன அதிபர் ஸி ஜின்பிங் உட்பட மாஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தில் உலகத் தலைவர்களை புட்டின் சந்திக்க உள்ளார்.

ஆனால், உக்ரேனிய அதிபர் செலென்ஸ்கி இதுவரை ரஷ்யாவின் போர்நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை என்பதுடன் குறைந்தது 30 நாட்கள் நீடிக்கும் போர் நிறுத்தத்தில் மட்டும் கையெழுத்திட தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

14

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

இன்றைய சர்வதேச சட்டங்களின்படி, எல்லா மக்களுக்கும் தங்களுக்கு இடையே உள்ள வளங்களை 'எல்லோருடைய நன்மைகளுக்காகவும்' என்ற கோட்பாடுகளில் பகிர்ந்து கொள்ளலாம். ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் ஐரோப்பிய காலனித்துவத்திலிருந்து விடுதலை அடைந்த போது, அவர்களின் கீழ் இருந்த படித்த மேல் வர்க்கத்தினரே ஐரோப்பிய காலினத்துவத்தின் வெற்றிடங்களை நிரப்பினர். அதனால் காலனித்துவ மனோபாவங்களிலே நாட்டின் அதிகார வர்க்கம், நாட்டின் வளங்களைத் தங்களது இனங்களின் நன்மைக்காக சுரண்டியது. அனேகமாக பெரும்பான்மையினத்தின் நன்மைகளுக்கே அவை பாவிக்கப்பட்டன.

இலங்கை கூட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பட்டய (International Covenant On Civil And Political Rights) ஆவணத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

ஆனாலும்,தமிழ் மக்களின் பாரம்பரிய வளங்களைத் திட்டமிட்ட முறைகளில் அபகரித்து, அவற்றைச் சிங்களப் பெரும்பான்மைக்காக சுரண்டியதின் எதிரொலிதான் தமிழ் மக்களைக் கிளர்ந்தெழச் செய்ததின் ஓர் அடித்தளம்.

தங்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட


விக்கிரமராஜசிங்கன்

வேண்டும் அதன் அடிப்படையில் தாங்கள் இழந்த தங்களின் இறைமையை மீளப் பெறவேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கைதான் வட்டுக்கோட்டை தீர்மானத்திலும் பின்னர் திம்புக் கோட்பாட்டிலும் முக்கியமாக வலியுறுத்தப்பட்டன. அவை அவர்களின் கோரிக்கைகளின் அத்திபாரக்கற்கள்.

மனித உரிமை ஆணைக்குழுவின் 49 ஆவது தொடரில், 8 பெப்ரவரி 1993 , பதினைந்து அரசசார்பற்ற சுயாதீன அமைப்புகள் சர்வதேச ஆவணத்தின் சரத்தின் கீழ் தமிழ்த் தாயகம் (Tamil Homeland) வடக்கிலும் கிழக்கிலும் இருப்பது அங்கீகரிக்கப்பட வேண்டும், அங்கு வதியும் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்குத் தகுதியானவர்கள் என்பவை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற

தொடர்ச்சி ▼


ராஜேஷ் கன்னா


# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

கோரிக்கையை முன் வைத்தன. அதைத் தொடர்ந்து காலம் காலமாக சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் உரிமைகளை ஒட்டியோ, அன்றில் இனப் பிரச்சினைக்கான தீர்வு சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படைகளில்தான் தீர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தது.

இப்படியான சர்வதேச சட்டங்களையும், அவற்றின் வளர்ச்சியையும், அவற்றின் ஆளுமைகளையும் ஏற்றுப் பயணிக்காதவிடத்து எதிர்பார்க்க வேண்டிய விளைவுகளையும் கூட்டிக் கணித்த ஜே.வி.பியின் மிதவாதக் குழுவினர்களான லயனல் போபகே பகுதி, 1977 ஆம் ஆண்டின் அவர்களது கொள்கை வகுப்பில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று, ஆனால் அது தனி நாடாக உருவாகுவதற்கானது என அர்த்தப் படுத்திக் கொள்ளக் கூடாது எனக் குறித்து, அது ஜே.வி.பியின் மத்திய குழுவினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின் பிறப்பிலேயே இருந்த ஒரு வித பயத்தின் மனப்போக்கின் தீவிரத்தால் அதனைத் திரிசங்கு நிலையாக்கி, அந்தப் பிரச்சினையிலேயே ஆதாயம் தேடப் புறப்பட்டனர்.

ஜே.வி.பி. மாத்திரமல்ல, பொதுவாக அரசியல் கட்சிகளிடையே தமிழ் மக்களை ஒட்டி இந்தத் திரி



விஜய குமாரதுங்க

சங்கு நிலை – ஏதோ ஒரு பயம் – காலம் காலமாக ஏன் எழுகின்றது?

அந்த மனோபாவத்தை மகாவம்ச காலத்தில் இருந்து சிலர் பார்ப்பார்கள். இதிகாச காலங்களில் தொடங்குபவர்களும் உண்டு. ஆனால் அந்த மனோபாவங்களுக்கும், பயங்களுக்கும் அத்திபாரமானவையை சரித்திர காலங்களில் இருந்து சிங்கள மக்களின் புத்திஜீவிகள் ஜே.வி.பியின் ஆரம்ப நாள்களில் இருந்தே உரைக்கத் தொடங்கினர். பேராசிரியர் விமலநந்தா, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசாங்கங்கள் இலங்கையின் வாணி



அமிதாப் பச்சான்

பங்களை ஆள்கொள்ள முனைகின்றன, அனேகமான தொழிற்சாலைகளும் வியாபாரங்களும் இந்தியத் தமிழரின் கைகளில்தான் இருக்கின்றன, அவற்றைக் கட்டுப்படுத்தாவிட்டால் அவை படிப்படியாக முற்றும் முழுதாக அவர்கள் கைகளுக்கு போய்விடும் என்ற பீதியைக் கிளப்பினார். அதற்கு உதாரணமாக ஒல்லாந்தர் காலத்துச் சம்பவங்களைக் கோடி காட்டி, கண்டியின் மன்னர் வீர பராக்கிரம நரேந்திரசிங்கன், மதுரையின் மன்னர் குலத்தின் பெண் ஒருவரை மணம் செய்ய விரும்பிய போது ஒல்லாந்தர் அதனை வன்மையாக எதிர்த்தமைக்குக் காரணம், அந்தத் திருமணத்தின் வாயிலாக தமிழ் வியாபாரிகள் தாங்கள் நடத்தும் கறுவா, கராம்பு, மாணிக்க கற்கள், யானைகள், யானை தந்தங்கள் போன்ற வியாபாரங்களில் உட்புகுந்து விடுவார்கள் என்பதில்தான். ஆனாலும் பின் 1669இல் அது நடந்த போது ஒல்லாந்தர் பயந்தமை போலவே சம்பவங்கள் இடம் பெற்றன. கண்டி அரசின் முழு வியாபாரங்களும் தமிழரின் கைகளுக்கு மாறி வல்வெட்டித்துறை அவற்றை ஒல்லாந்தருக்குச் சுங்கவரி செலுத்தாது பொருள்களை அந்த வழியூடாக கொண்டு சேர்க்கும் துறைமுகமாக வளர்த்தது. மதுரையின் தமிழ் வியாபாரிகள் வல்வட்டித்துறை மூலமாக கண்டிய அரசுக்கு தேவையான எவ்வித பொருள்களையும் தரக்கூடியவர்களாக இருந்தார்கள். ஒல்லாந்தர் கைகளில் எல்லா அதிகாரங்கள் இருந்தும் நடைமுறையில் வல்வட்டித்துறை வர்த்தகம் நடைபெற்றது. ஒல்லாந்தரின் கடற்படையால் வல்வெட்டிதுறையின் படகோட்டிகளுக்கு சவால் தர முடியவில்லை. குறுகிய காலத்தில் வல்வெட்டிதுறையாளர்கள் கண்டிய மன்னனின் அமைச்சரவை, முகாமையாளர் எனப்பட்ட பலரை தங்களது கடன் வலைக்குள் வைத்திருந்தனர்.

கண்டி அரசு 1815இல் வீழ்ந்த பின் இந்தத் தமிழ் வியாபாரிகளும் செல்வாக்கு இழந்து, அவர்களும் அந்தப் பகுதிகளை விட்டு வெளியேறி, பின் பிரித்தானியாரின் ஆதரவோடு திரும்பி வந்தனர். கண்டிய

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**தொடர்ச்சி▲**

அரசனின் வளங்கள் முழுமையாக ஆங்கிலேயரின் கைகளுக்கு வந்தபின் அவர்கள் அதில் தேயிலை, கறுவா, ரப்பர் செய்கைகளுக்காக அங்கிருந்த காணிகளைப் பெருமளவில் குத்தகைக்கும் விற்பனைக்கும் விட்டார்கள். அவ்விதம் காணிகளை விற்பதற்கும், குத்தகைக்குத் தருவதற்கும் ஏதுவாக முடிக்குரியதாக ஏற்படுத்த அவற்றில் குடியிருந்த பெரும்பான்மை மக்கள் வெளியேற்றப்பட்டு வீதிகளுக்கு வந்து, நிராதரவாக நின்றமையெல்லாம் காலனித்துவத்தின் அவலம் – இன்றைய முள்ளிவாய்க்காலும், முல்லைத்தீவும் போல.

அப்படியான காணிகளுக்காக ஆங்கிலேய காலனித்துவ திறைசேரிக்கு பணம் தங்கத்தில் வைப்பில் இருந்தது. காணிகளை வளப்படுத்த குத்தகைகள் பெற்ற ஆங்கிலேயரோ அங்கிருந்த பெரும்பான்மை மக்களை வேலைக்கு அமர்த்தவில்லை. மாறாக காலனித்துவ அரசின் அனுசரணையில் கூலிகளாக தமிழர்களை தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து, இந்தப் புதிய முயற்சிகளுக்கு தேவையான தளபாடங்கள் மற்றைய அத்தியாவசியங்களுக்கும் தமிழ் வியாபாரிகள் மீண்டும் வந்து கடை பரப்பி, அந்தத் தோட்டங்களை மேம்படுத்தும் தேவைகளுக்காகப் பணம் பட்டுவாடா செய்து, அரசின் திறைசேரியையே அவர்களுக்கு கடனாளியாக வைத்திருந்தார்கள். அதனால் கவர்னர் டொரிங்டன் திறைசேரியை சீர்படுத்த 5 புதிய வரிகளை விதிக்க வேண்டி வர, இதனால் கண்டியப் புரட்சி எழுந்தது. கலாநிதி விமலானந்தா சுதந்திரத்திற்கு பின் வந்த அரசுகள் எதுவும் தமிழர்கள் வியாபாரத் துறையில் கொண்டிருந்த ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த எந்தச் செயல் திட்டமும் வகுக்கவில்லை, அநுராதபுரத்தைப் பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் புறக்கோட்டையைப் பற்றி கவனம் செலுத்துவதில்லை என்றார்.

இவ்வாறான புத்திஜீவிகளின் உந்துதல்களில் 1967 – 1971 இல் ஜே.வி.பி. இயக்கத்தின் இளம் சிந்தனையாளர்கள் சீனாவின் கம்யூனிஸ மோகத்திலும், இந்தியாவை – முக்கியமாக தென்னிந்தியாவையும் தமிழர்களையும் – இலங்கையின் பரம எதிரியாகவும், முதலாளித்துவத்தின் காவலனாகவும் பார்த்தனர். அதே சமயம் கண்டியை ஆண்ட கடைசி இந்திய தமிழ் அரசனான விக்கிரமராஜசிங்கனின் துரோகங்களினால்தான் 1815 கண்டி அரசு ஆங்கிலேயருக்குத் தாரைவாக்கப்பட்டது எனவும், அப்போது இருந்த வங்கிகளில் தமிழ் வியாபாரிகளுக்குக் கூட வசதிகள் செய்யப்பட்டன என்ற வயிற்றெரிச்சல்களும் பிரசாரம் செய்யப்பட்டன. இவற்றை ஜே.வி.பி. அங்கத்தினர் பிரசார படுத்தும் நேரங்களில், நாட்டின் மைந்தன் வழிகள் ஏதும் இல்லாது வாட, சந்தர்ப்பங்களுக்காக ஏங்க, வெளியில் இருந்து வந்த ஒருவன் (தமிழன்) சுகபோகங்களை அனுபவிக்கிறான், இந்த



காமினி பொன்சேகா

நிலைமை மாற்றப்பட வேண்டும் என உணர்ச்சிப் போக்கிலேயே அவற்றை வெளிப்படுத்தினர்.

அதே தோரணையில்தான் அவர்கள் தமிழ், ஹிந்தி படங்களிலும், சினிமாப் பாட்டுக்களிலும் சிங்கள மக்கள் சிக்கி கிடக்கின்றமையைப் பார்த்து, அவற்றிலிருந்து வெளியேவர வேண்டும், சிங்களக் கலைஞர்களுக்கும், ஆக்கங்களுக்கு பெறுமதிகள் கிடைப்பதில்லை என்ற போராட்டங்கள் தொடங்கி, 1980 ஆம் ஆண்டில் உள்நாட்டு தயாரிப்புகளை ஊக்குவிக்க இந்தியப் படங்களை தடை செய்யப்பட்டன. ஆனால் அந்தத் தடையிலும் எழுந்து சினிமா துறையில் முன் நின்ற கே.குணரத்தினம், சிலோன் தியேட்டர்ஸ் செல்லமுத்து போன்றவர்களை ஆத்திரத்துடன் அவர்கள் பார்த்தனர். ஆனாலும் இந்திய படங்களின் பாடல்களின் விருப்பங்களில் இந்திய நடிகர்களின் பிம்பங்களான காமினி பொன்சேகாவையும், விஜய குமாரதுங்கவையும் கொண்டாடினார்கள். ஏனெனில் ராஜேஷ் கன்னா, அமிதாப் பச்சான் போன்று இருந்த அவர்களது தோற்றங்களின் மாயையில். மக்களின் இந்த விளக்க முடியாத – விளங்கிக் கொள்ள முடியாத – நிலைகளில் அவர்களது ஆதரவுகளை வளர்த்துக் கொள்ள 1977இல் இந்தியத் தொழிலாளர்களைப் பற்றியும், இந்தியாவை ஒட்டியும் மிதவாத போக்கை கடைபிடித்துப் பின்னர் திரிசங்கு நிலைக்கு மாறி, அதனை 1983இன் பின் சந்தித்த தடைகளால் ஜே.வி.பி. அதனை மேலும் வளர்ந்தது.

(தொடரும்)

# இன்றைய ராசி பலன்கள் - 08.05.2025




உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். அமைதியுடனும் பொறுமையுடனும் இருக்க வேண்டும். எதிர்காலத்துக்குத் திட்டமிடுங்கள்.

பணியில் அதிகப்படியான சுமைகள் காணப்படும். உங்கள் பணிகளை முறையாக முடிக்க சில சௌகரியங்களை இழக்க நேரும்.

பணியிடத்தில் காணப்படும் பதற்றத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்து வீர்கள். இதனால் இருவரிடையே வாக்குவாதம் ஏற்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக முதுகு வலி ஏற்பட்டு அதனால் கவலை உண்டாகலாம்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்கள் பணிகளை செவ்வனே ஆற்றுவீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்களுள் இருக்கும் திறமை காரணமாக நீங்கள் திறம்பட செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் ஒற்றுமை வலுப்படும்.

பண வரவு அதிகமாக காணப்படும். எதிர்பாராத வரவு ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் காணப்படாது. கண்டிப்பான உணவு முறை மற்றும் ஒழுக்கம் உங்கள் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்க உதவும்.




இன்று உங்களிடம் நம்பிக்கைப் போக்கு காணப்படும். உங்கள் முயற்சி மூலம் கிடைக்கும் வெற்றி உங்கள் மன உறுதியை அதிகரிக்கும்.

நீங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். புதிய வாய்ப்புகள் மூலம் உங்கள் திறமையை நீங்கள் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிப்பு மூலம் நிதிநிலைமை உயரும்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் எண்ணெய் உணவுகள் காரணமாக தோல் பிரச்சினைகள் காணப்படும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சி அடையுங்கள். இதனால் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் அமைதியற்ற சூழல் காணப்படும். சக பணியாளர்களுடனான உறவில் சில சிக்கல்கள் இருக்கும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இதனை தவிர்ப்பது நல்லது.

இன்று தேவையற்ற செலவுகள் மற்றும் அதனைக் கையாள்வதில் கடினமான சூழல் காணப்படும். இழப்பைத் தவிர்க்க முறையாக திட்டமிட வேண்டும்.

தலைவலி போன்ற சிறு உபாதைகள் காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாகத் தேவையற்ற மன உளைச்சல் காணப்படும்.




இன்று சில சிக்கல்கள் காணப்படும் என்பதால் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். வாக்குவாதம் மற்றும் வதந்திகளில் ஈடுபட வேண்டாம்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவு நல்லுறவாக இருக்கவும் உறவில் மகிழ்ச்சி பராமரிக்கவும் இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று பண இழப்பு ஏற்படும். நிதி சம்பந்தமான முக்கியமான முடிவுகளை இன்று தவிர்ப்பது சிறந்தது.

தேக ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று இலக்குகளை அடைவதற்கு உகந்த நாள். இன்று எதிர்பாராத நன்மைகள் நேரலாம்.

நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைவாக முடிப்பீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் மனதில் பொங்கும் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள்.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




உங்களின் முக்கியமான செயல்களை இன்று முடிக்க இயலாது. உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிட்டால் வெற்றி அடையலாம்.

நீங்கள் பணியில் ஆழ்ந்து ஈடுபட்டிருப்பீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது சில சவால்களை சந்திக்க நேரும். சூழ்நிலைக் கேற்றவாறு வாழ வேண்டியது அவசியம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்படும். இதனால் உங்கள் துணை கவலை அடைய நேரும்.

இன்று பண வரவு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவில் இருக்காது. நிதிநிலையில் ஸ்திரத்தன்மை காண்பதில் சில தடைகளை எதிர்கொள்ள நேரும்.




இன்று பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதலை அளிக்கும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மூலம் மகிழ்ச்சி காணலாம்.

நீங்கள் இன்று பணிகளை திட்டமிட்டபடி முடிக்க வேண்டும். மூத்தோர்களின் ஆலோசனை வழி காட்டும்.

உங்கள் விருப்பமின்றி வீட்டில் நடைபெறவிருக்கும் சுபநிகழ்ச்சி பற்றிய அதிருப்தி காணப்படும். உங்கள துணையிடம் கோபமாக நடந்து கொள்வீர்கள்.

இன்று வரவு செலவு இரண்டும் சேர்ந்து காணப்படும். உங்கள் குடும்பத்துக்காக அதிகமாக செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அஜீரணக் கோளாறு மற்றும் அசௌகரியம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.05.2025




இன்று நிச்சயமற்ற தன்மையை உணர்வீர்கள். உங்கள் முயற்சிகளுக்கான பலனில் நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். அமைதியாக இருக்க வேண்டும்.

பணியில் கவனம் குறைந்து காணப்படும். எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் இன்று சகஜமாகவும் உங்கள் துணையின் விருப்பப்படியும் நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று செலவினங்கள் அதிகமாக காணப்படும். எதிர்கால நலன் கருதி நீங்கள் பணத்தை சேமிக்க வேண்டும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்களை மிகவும் அலட்டிக் கொள்ளாதீர்கள். பிரார்த்தனை மூலம் மன அமைதி பெறலாம்.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை-களை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.




இன்று அனைத்தும் சுமூகமாக நாடாகும். நம்பிக்கை உணர்வு உங்களை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும்.

நீங்கள் இன்று பணியில் சிறந்து விளங்குவீர்கள். உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள். அதே சமயத்தில் உங்களுள் இருக்கும் ஆற்றலைக் கண்டறிய முடியும்.

இன்று உங்கள் போக்கில் துணையின் மீது அன்பும் அக்கறையும் காணப்படும். நண்பரின் இல்ல திருமண விழாவிற்கு செல்வதன் மூலம் இருவரும் நெருக்கமாக காணப்படுவீர்கள்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். நிதி நிலைமை சுதந்திரமாக இருக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




ஆன்மீக ஈடுபாடு வெற்றியை அளிக்கும். உங்களிடம் உறுதியும் காணப்படும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். இறுக்கமான பணிகள் மற்றும் பணிச்சுமைகள் காரணமாக பணியில் தவறுகள் நேரலாம்.

நீங்கள் இன்று உணர்ச்சிவசப்பட்ட மன நிலையில் இருப்பீர்கள். சிறிய விஷயங்களைக் கூட தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக நீங்கள் அதிகமாக செலவு செய்ய நேரும்.

கண் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும்.

# காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி முஸ்லிம் காங்கிரஸின் வசமாகும்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. நம்பிக்கை

உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் முடிவடைந்த நிலையில் பெரும்பாலான சபைகளில் எவருக்கும் தனித்து ஆட்சியமைக்க முடியாமலிருப்பதாகவும் அனைத்து சவால்களை கடந்து தமது அணியினர் காத்தான்குடி நகர சபையில் அனைத்து வட்டாரங்களையும் வெற்றி கொண்டு பெரும்பான்மை உறுப்பினர்களைப்பெற்று ஆட்சியமைக்கவிருக்கிறோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

நேற்று அவர் வெளியிட்ட விசேட அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் நகர சபை மற்றும் ஓட்டமாவடி பிரதேச சபைகளில் எவரும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை



காணப்படுகிறது.

இருந்த போதிலும் இவ்விரண்டு சபைகளையும் முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றுவதற்கான அனைத்து வியூகங்களையும் நாம் வகுத்துள்ளோம். இந்த இரண்டு சபையையும் முஸ்லிம் காங்கிரஸே கைப்பற்றும். அதில் எமக்கு எந்தச் சவாலும் இல்லை.

அதேபோன்று, எமது கட்சிக்கு வாக்களித்த உடன்பிறப்புக்கள் மற்றும் கட்சியின் வெற்றிக்காக அயராது உழைத்த கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், போராளிகள், சமூக ஆர்வலர்கள், ஊடக நண்பர்கள் அனைவருக்கும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். -என்று உள்ளது.